தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில்

7000க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் தொடக்கம்!

தமிழ்நாடு அரசு தகவல்!

சென்னை, ஆக. 4- தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புத்தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழலைக் கட்டமைத்து அதிக எண்ணிக்கையில் புத்தொழில்களை உருவாக்க தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 20.9.2023 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டது.

மேலும், புத்தொழில் ஆதார மானிய நிதி மற்றும் தமிழ்நாடு பட்டியலினத்தவர், பழங்குடியினர் புத்தொழில் நிதி உள்ளிட்ட திட்டங்களின் மூலம் புத்தொழில் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், 2021 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 32 என்ற அளவில் இருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 9 ஆயிரத்தை தாண்டி உள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டில் மட்டும் 7006 புத்தொழில் நிறுவனங்கள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளதாகவும், மகளிர் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2021ம் ஆண்டில் 966ஆக இருந்ததாகவும், தற்போது மூன்று மடங்குக்கும் மேல் அதிகரித்து 4 ஆயிரத்து 446 ஆக உயர்ந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக, புத்தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழலை கட்டமைத்து செயல்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதல் நிலையை பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளின் சுகாதார நிலைகுறித்து அடையாளம் காணப்பட்ட

குழந்தைகளுக்காக ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மக்களவையில் க.செல்வம் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஆக.4- இந்திய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கேள்வி நேரத்தின்போது ஒன்றிய சுகாதாரத்துறை சம்பந்தமாக கீழ்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

1) ஒன்றிய அரசு RBSK ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரத் திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்துகிறதா?

2) அப்படியானால், அத்திட்டத்தின் முன்னேற்ற விவரங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விவரங்களை அளிக்கவும்?

3) RBSK திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்களின் விவரங்கள் குறித்து ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் சமூக தணிக்கை செய்திருக்கிறதா;

4) அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் சமூக தணிக்கை மதிப்பீட்டின் முடிவு என்ன?

5) தமிழ்நாடு மாநிலத்தில் RBSK திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து கடந்த மூன்று ஆண்டுகளில் காப்பீடு செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை விவரங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட நிதியின் அளவு எவ்வளவு;

6) குழந்தைகளின் சுகாதார நிலை குறித்து அடையாளம் காணப்பட்ட குழந்தைகளுக்காக ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மேலும் அக் குழந்தைகளுக்கான உரிய மருத்துவ சேவை அளிக்கப்பட்டுள்ளதா? அதன் விவரங்களை வழங்கவும் கோரி கேள்விகளை எழுப்பினார்.

இல்லம்தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை !

மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் !

நொளம்பூர் வே.ராஜன், ச.சங்கர் கணேஷ்,செ. இரவி பங்கேற்பு !

சென்னை ஆக:4 சென்னை தெற்கு மாவட்டம்,கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, இன்று (4.08.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

மதுரவாயல் வடக்கு பகுதி,143வது வார்டு அலுவலகத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு மதுவாயல் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் பூ. நவராஜ் தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் மற்றும் செ. இரவி ஆகியோரின் முன்னிலையில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகச் செயலாளர், மண்டலம்XI குழத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

கூட்டத்தில் இல்லம்தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் இளைஞரணி பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. ஆகவே இக்கூட்டத்திற்கு மதுரவாயல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள்,வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

மாநில நிர்வாகிகள் கூட்டம்!

ஆதிதிராவிடர் நலகுழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் நாளை (5.08.2024 திங்கட்கிழமை) மாலை 3.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைத் தலைவர் - இணைச் செயலாளர்கள் - துணைச் செயலாளர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாள் மற்றும் கழக அரசு கொண்டு வந்த அருந்ததியருக்கான 3 சதவிகித இடஒதுக்கீடு செல்லும் எனும் உச்ச நீதிமன்ற தீர்ப்பினை பெற பெருமுயற்சி மேற்கொண்ட கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டுதல் குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03.08.2024

ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் :

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் ஆகஸ்ட் 7 அன்று நலத்திட்ட உதவிகள்!

மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்

திருவள்ளூர், ஆக. 4- திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழனத் தலைவர் அவர்கள் 5 முறை தமிழக முதல்வராக பொறுப்பேற்று அடித்தட்டு மக்களுக்கும் விவசாயிகளுக்கும் ஏழைகளுக்கும் பல்வேறு தரப்பு மக்கள் பயன் பெறும் வகையில் சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றி தந்தவர் தலைவர் கலைஞர். எண்பது ஆண்டு காலம் பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரார் சட்டமன்ற வரலாற்றில் போட்டியிட்ட 11 முறையும் வெற்றி வாகை சூடியத் தலைவர்.

இந்திய குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் மாநில ஆளுநர்களுக்கு குடியரசு தினத்தன்று தேசிய கொடியை ஏற்றும் உரிமை இருக்கு போது ஜனநாயக நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாநில முதல்வர்களுக்கு ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று கோட்டையில் தேசிய கொடியை ஏற்றும் உரிமையை பெற்றுத்தந்தவர் முத்தமிழ் அறிஞர் அவர்கள் 2010 இல் குடிசைகள் இல்லாக் கிராமங்கள் குடிசைப் பகுதிகள் இல்லாநகரங்கள் படைக்க கலைஞர் வீடு வழங்கும் திட்டம் தந்தவர் கலைஞர் தொழிலாளர் தினமான மே 1ஐ விடுமுறை தினமாக அறிவித்து, மேதினத்திற்கென்று நினைவுச் சின்னம் மற்றும் மே தின பூங்காவையும் அமைத்தவர்.

2008ல் ஆண்டு பொது விநியோக திட்டத்தில் 1 கிலோ அரிசி 1 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர். 2009ல் கலைஞர் காப்பீட்டு திட்டம் முலம் மருத்துவமனைகளில் எற்படும் செலவை அரசே ஏற்கும் வகையில திட்டம் வகுத்தவர் தலைவர் கலைஞர். அரசு வேலை வாய்ப்;பில் மகளிருக்கு 30 சதவித இட ஒதுக்கீடு உள்ளாட்சி துறையில் 33 சதவீத இட ஒதுக்கீடு தந்து மகளிர் முன்னேற்றத்திற்கான பல் வேறு சமுக நலன் சார்ந்த திட்டத்தை கொண்டு வந்தவர் மகளிர் முன்னேற மகளிர் சுய உதவிக்குழுக்களை உருவாக்கியவர் தலைவர் கலைஞர்.

சமுக நீதிக் காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் வருகிற ஆகஸ்ட் 07.08.2024 புதன்கிழமை அன்று முத்தழிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தும் விதமாக திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்க்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர். கிளை வார்டு தோறும் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியும் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கியும் ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கியும். தூய்மை பணியாளர்களுக்கு ஆடைகளை வழங்கியும் டாக்டர் கலைஞர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்போம்.

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் வார்டு கிளை செயலாளர்கள் பல்வேறு அணிகளின் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கிளை பேரூர் கிளை ஊர் கிளை உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளில் தலைவரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் மேற்கண்ட நினைவு நாள் நிகழ்ச்சியினை நடத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை! குன்றத்தூர் தெற்கு ஒன்றியக்

கழக செயற்குழு - இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி உறுப்பினர்கள் கூட்டம்!

ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஆக. 4- குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது கூட்டம் நாளை (5.8.2024 - திங்கள்கிழமை) மாலை 4.00 மணியளவில் படப்பை தில்லை மகாலில் ஒன்றியக் கழக அவைத் தலைவர் மு.சுப்ரமணி தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றிட தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், குன்றத்தூர் ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் வ.நந்தகோபால், இ.மணி, வாசுகி மகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மு.ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஒன்றிய இளைஞர் அணி நிர்வாகிகள் ப.அறிவொளி, எல்.சுதாகர், க.பா.ஆடலரசு, மா.சே.பிரகாஷ், ரா.தீபக்ராஜ் ஒன்றிய மாணவர் அணி நிர்வாகிகள் அ.ஜமீர், இரா.குமரவேல், செ. பார்த்திபன், இ.பாலாஜி, ஆர்.சையத்ரமிஸ், பொன். இளையபாரதி, மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், பொன்.ரமேஷ் கவி, சங்கீதா வேலு, எஸ். கர்ணன்,கு. ஏழுமலை,லட்சுமிஞானசேகரன், ச.பாலகிருஷ்ணன், ஜி.எ.ராயப்பன், மலர்விழி தமிழ்அமுதன், தினேஷ் கந்தசாமி, ம.ரேவதி, கே.என்.சி.சத்தியமூர்த்தி, வி.எஸ்.கோதண்டராமன், என்.எஸ். இளங்கோ, மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், ஜி. இருசப்பன், ஏ.இ.பரசுராமன், ம. அசோக்குமார், ஏ.இ.பஞ்சாட்சரம், ப.வேல்முருகன், ச.ரஞ்சித்குமார், இரா.சந்திரசேகர், உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், கிளைக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றஉறுப்பினர் அலுவலகத்தில்முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கனவு இல்லத்திட்டத்திற்கான பயனாளிககுக்கும் பழுதடைந்த வீடுகளுக்கு மறு சீரமைப்பு செய்யவதற்கான ஆணை களை திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்தநிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குமரி மணிமாறன்
ஆகஸ்ட் 4 (2021)

தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில் பணியாற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோரின் பணிகளைப் போற்றும் வகையில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை வடகிழக்கு மாவட்ட

மகளிர் அணி - மகளிர் தொண்டரணி கூட்டம்!

எம்.கோமலவள்ளி - எம்.அம்மு வேண்டுகோள்!

சென்னை, ஆக. 4- சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட அமைப்பாளர்கள் எம். கோமலவள்ளி, எம்.அம்மு ஆகியோர் விடுத் துள்ள வேண்டுகோள் வருமாறு : -

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் மாநில மகளிர் அணி செயலாளர் குமாரி விஜயகுமார் முன்னிலையில் இன்று (4.08.2024 ஞாயிற்றுகிழமை) மாலை 04.00 மணியளவில் மாதவரத்திலுள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் மற்றும் சமூக வலைதள பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை, பயிற்சி பாசறை

இவ்வாறு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எம்.கோமலவள்ளி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எம்.அம்மு ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

வட்டக் கழக செயலாளர்கள் கூட்டம்!

பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, ஆக. 4 ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை அறிவிப்பு வருமாறு:

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (5.8.2024 திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு இடம் : இளங்கோ சாலையில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவை தலைவர் எம். ஆர்.ஜம்புலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

பொருள் : 7.8.2024 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள், கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சங்ககிரி வி. முத்து
ஆகஸ்ட் 4 (2016)

சங்ககிரி பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

ஒன்றுபட்ட சேலம் மாவட்டப் பிரதிநிதியாகவும் – மாவட்ட துணைச் செயலாளராகவும் – நாமக்கல் மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

1971, 1996 ஆகிய இரண்டு முறை சங்ககிரி தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.